நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண். 187/2021

அரசு தரப்புக்காக அ. சா.4 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | டாக்டர்.சுகந்தி | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 8 | | | |

1, 2 எதிரிகள் ஆஜரில் உள்ளனர். 3வது எதிரி ஆஜரில் இல்லை மனு தாக்கல் அனுமதிக்கப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17th day of September 2025.

**முதல் விசாரணை–** (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 12.32 )

நான் தற்போது கடலூர் அரசு மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.06.2021 அன்று மாலை 05.50 மணிக்கு கடலூர் அரசு மருத்துவமனையில் மகப்பேறு பிரிவில் பணியில் இருந்தபோது பண்ருட்டி அனைத்து மகளிர் காவல்நிலைய குற்ற எண்.13/2021 சட்டப்பிரிவு 451, 328, 376(2)(h), 376 r/w 114 of I.P.C என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட 19 வயதுடைய திருமதி.பாரதி என்பவரை பரிசோதனைக்காக பண்ருட்டி மகளிர் காவல்நிலைய தலைமைக் காவலர் திருமதி.நிர்மலா என்பவர் அழைத்து வந்தார். அவரை பரிசோதனை செய்வதற்கான ஒப்புதல் அவரிடம் பெறப்பட்டது. அவருடைய தாயார்

திருமதி.ஜெயந்தி என்பவரும் உடன் இருந்தார்.அவருடைய அங்க மச்ச அடையாளங்களை சரிபார்த்தேன். அவரை விசாரித்தபோது கடந்த 2018 அன்று ஜெயமணி என்பவரை திருமணம் செய்து கொண்டதாகவும் அவர் 4 மாதம் கர்ப்பமாக இருந்தபோது ஜூலை 2019 அன்று இரவு ஒரு மாத்திரை எடுத்துக்கொண்ட பிறகு மயங்கி விட்டதகாவும் அதிகாலை 04.00 மணியளவில் வாந்தி எடுத்ததாகவும் அப்போது அவர் தான் மயங்கிய நிலையில் உள்ளாடைகள் மட்டும் அணிந்திருந்ததாகவும் அவர் அருகில் சுந்தமூர்த்தி மற்றும் அவர் கணவர் இருந்ததாகவும் மீண்டும் அவர் மயக்கத்திற்கு திரும்பி விட்டதாகவும் மாலை 05.00 மணிக்கு எழுந்தபோது பிறப்புறுப்பில் அதிக வலி இருந்ததாகவும் கூறினார். அதுபற்றி கணவர் மற்றும் மாமியாரிடம் கேட்டபோது இனிமேல் நடக்காமல் பார்த்துக்கொள்கிறோம். இதைபற்றி வெளியே கூறினால் கணவர் தற்கொலை செய்து கொள்வேன் என்று மிரட்டியதாகவும் கூறினார். கடந்த டிசம்பர் 2020 தனக்கு தெரிந்த மணிகண்டன் என்பவருடன் தன்னுடைய கணவரின் வற்புறுத்தலின் பேரில் தன் கணவரும் அதே அறையில் இருந்தபோது உடலுறவு வைத்துக்கொண்டதாகவும் கூறினார். கடந்த 2021 ஜனவரி அன்று மீண்டும் தனது கணவர் மணிகண்டன் என்பவருடன் தொடர்பு கொள்ள வற்புறுத்தியதால் அவர் அதற்கு மறுத்துவிட்டு தனது அப்பா, அம்மாவுடன் தனது சொந்த ஊருக்கு சென்றுவிட்டதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவர் நல்ல மனநிலையுடன் காணப்பட்டார். அவருடைய ஆடைகள் நல்ல நிலையில் இருந்தன. தான் 13 வயதில் பூப்பெய்தியதாக கூறினார். அவருடைய கடைசி மாதவிடாய்க்கான தேதி 03.06.2021. அவருடைய மாதவிடாய் நாட்கள் இயல்பான அளவில் காணப்பட்டன. அவருக்கு ஒன்றரை வயதில் ஆண் குழந்தை சுகப்பிரசவத்தில் பிறந்ததாக கூறினார். அவருடைய இரண்டாம் நிலை பாலின உறுப்புகள் வயதிற்கு ஏற்றவாறு வளர்ச்சியுடன் காணப்பட்டது. அவருடைய பிறப்புறுப்பில் எந்தவிதமான வெளிப்புற காயங்களும் காணப்படவில்லை. சிறுநீர் பரிசோதனையில் அவர் கர்ப்பமாக இல்லை என தெரிய வந்தது. பிறப்பு உறுப்பில் திரவ தடவலில் விந்தணுக்கள் காணப்படவில்லை. அவருடைய ஸ்கேன் பரிசோதனையில் இயல்பான அளவில் காணப்பட்டது. அவருடைய ஸ்கேன் பரிசோதனையில் கர்ப்பப்பை

காப்பர் டி இருந்தது. என்னுடைய இறுதி கருத்துரையாக பாதிக்கப்பட்ட பெண் கடைசியாக உடலுறவு கொண்டது டிசம்பர் 2020 என கூறினார். சமீபத்தில் உடலுறவு எதுவும் வைத்துக்கொண்டதற்கான தடயம் எதுவும் இல்லை. அவர் உடலில் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்பட்டதற்கான காயங்கள் எதுவும் இல்லை. கன்னித்திரை கிழிந்து காணப்பட்டது என எனது இறுதி கருத்துரையில் குறிப்பிட்டுள்ளேன். (அந்த பாதிக்கப்பட்ட பெண்ணின் மருத்தவ பரிசோதனை அறிக்கை 6 தாள்கள் கொண்டது **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது). ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>2, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலிசார் பரிசோதனைக்கு அழைத்துவந்தபோது வேண்டுகோள் கடிதத்துடன் அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். வழக்கின் வரலாறை குறிப்பிட்டு தான் வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அ.த.சா.ஆ.3 பாதிக்கப்பட்ட பெண்ணின் மருத்துவ பரிசோதனை அறிக்கையில் Compliants of the Victim என்ற பகுதியில் உள்ள இரண்டாவது வரியில் unknown என்று குறிப்பிடப்பட்டு இருப்பது மேல் எழுதப்பட்டு Known என்று மாற்றம் செய்யப்பட்டது என்று சொன்னால் முதல் எழுத்தை மட்டும் U என்று எழுதியதை மாற்றி அதன்மீது K என்று மாற்றி எழுதியுள்ளேன். அதே பத்தியில் சுந்தரமூர்த்தி என்ற பெயரில் N என்ற எழுத்து மட்டும் திருத்தப்பட்டுள்ளது என்றும் மணிகண்டன் என்ற பெயரில் K என்பதை மாற்றி G என்பது எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கின் வரலாறு முதலில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டும் பின்னர் தமிழில் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கின் வரலாற்றில் பாதிக்கப்பட்ட பெண்ணிற்கு காயங்கள் ஏற்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். போலிசார் என்னிடம் பெண்ணை ஆஜர் செய்யும்போது கொடுத்த வழக்கின் வரலாறை மருத்துவ பரிசோதனை அறிக்கையில் அப்படியே குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

2, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக்கொள்வதாக குறிப்பிட்டார்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 12.55)

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*"என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.